## நீட்: மாணவர்களின் சிதைக்கப்பட்ட கனவுகள்!

# ‘நீட்’டுக்கு எதிரான இயக்கத்திற்கு அனைவரும் ஆதரவளிப்போம்!

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் ‘ட்விட்டர்’ பதிவு!

சென்னை, செப்.22-

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ட்விட்டர் பதிவு வருமாறு:-

**‘நீட்’ என்பது தேர்வல்ல; எத்தனையோ மாணவர்களின் சிதைக்கப்பட்ட கனவுகள்! குடும்பங்களின் கண்ணீர்!**

**அதனால்தான் சமரசமின்றி, தொடக்கம் முதலே “நீட் ஒழிப்பே நிரந்தரத் தீர்வு!” என்று போராடி வருகிறோம்.**

**அந்த இலக்கோடு ‘நீட்டை ஒழிப்போம்’ இயக்கத்தை முன்னெடுத்துள்ள நீட் எதிர்ப்புக் கூட்டியக்கம் - தமிழ்நாடு தோழர்களை இன்று சந்தித்து, அவர்களது கையெழுத்து இயக்கத்தில் கையெழுத்திட்டு என் ஆதரவைத் தெரிவித்தேன்.**

**இது அரசியல் வேறுபாடுகளைக் கடந்த, நம் மாணவர்களின் எதிர்காலத்துக்கான போராட்டம்.**

**எனவே, கழகத் தோழர்கள், இளைஞர்கள், மாணவர்கள் உள்ளிட்ட அனைவரும் இந்த இயக்கத்திற்கு ஆதரவளித்திட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.**

இவ்வாறு கழகத் தலைவர் அவர்கள், தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (21.9.2026) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் புதிய புரட்சிக் கழகத்தின் தலைவர் ஓ.இ.சங்கர் பொதுச்செயலாளர் கோல்டன் கோபி ஆகியோர் தலைமையில் மாநில நிர்வாகிகளான துணைப் பொதுச் செயலாளர் தரமணி வேலு, தலைமை நிலையச் செயலாளர் மடையத்தூர் துரைசாமி, மாநில ஒருங்கிணைப்பாளர் கே.பி.ஹரிகிருஷ்ணன், கொள்கைப் பரப்பு செயலாளர் வழக்கறிஞர் கேட் சேகர், கமலஹாசன் செல்வமணி, உமா மகேஷ்வரன் மாநிலச் செயலாளர் அஜிஸ்ராசா, மாவட்டச் செயலாளர் மதுராந்தகம் ஜி.கே.சேகர், மாவட்ட தலைவர் வி.எம்.மாரிமுத்து, பொருளாளர் இளங்கோ, அமைப்பாளர் மணிகா ஆகியோர் நேரில் சந்தித்து, நடைபெறவிருக்கும் 2026 சட்டப்பேரவை இடைத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு புதிய புரட்சிக் கழகம் முழு ஆதரவு அளிப்பதாகவும், இடைத்தேர்தல் நடைபெறும் மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டமன்றத் தொகுதிக்கு அறிவிக்கப்பட்டுள்ள கழக வேட்பாளர்களின் வெற்றிக்கு புதிய புரட்சிக் கழக நிர்வாகிகள், தோழர்கள் முழுமையாக பாடுபடுவார்கள் எனவும் தெரிவித்தனர். இந்நிகழ்வின்போது பனையூர் பாபு உடனிருந்தார்.

## தி.மு.க. என்றென்றும் களத்தில் நிற்கும் கட்சி என்பதை இடைத்தேர்தல் வெற்றி மூலம் நிரூபித்து

# ‘சர்க்கஸ் கும்பலிடம்’ சிக்கியுள்ள தமிழ்நாட்டை மீட்டெடுப்போம்!

## பூவிருந்தவல்லி மணவிழாவில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் உரை!

**சென்னை, செப். 22-**

**தி.மு.கழகம் என்றென்றும் களத்தில் நிற்கும் கட்சி என்பதை இடைத்தேர்தல் வெற்றி மூலம் நிரூபித்து ‘சர்க்கஸ் கும்பலிடம்’ சிக்கியுள்ள தமிழ்நாட்டை மீட்டெடுப்போம் என பூவிருந்தவல்லியில் நடைபெற்ற மணவிழாவில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சூளுரைத்தார்.**

திருமண விழாவில், கழக இளைஞர் அணிச் செயலாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய வாழ்த்துரை வருமாறு:

இன்றைக்கு பூந்தமல்லி நகர இளைஞர் அணி அமைப்பாளர் அருமைத் தம்பி ராஷிக், சகோதரி மரியம் பாத்திமா இணையருடைய திருமண விழாவில் கலந்துகொண்டு, உங்களோடு சேர்ந்து மணமக்களை வாழ்த்துவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தத் திருமண நிகழ்ச்சி மூலமாகத் திருமண வாழ்க்கையில் அடியெடுத்து வைக்கக்கூடிய மணமக்களுக்கு, நாம் அத்தனை பேரும் நம் மனமார்ந்த வாழ்த்து களைத் தெரிவித்துக் கொள்வோம். அதை விடக் கூடுதல் சிறப்பு, இங்கே வந்தவுடனே கூறினார்கள், இது ஒரு காதல் திருமணம் என்று. காதல் கைகூடி, இன்றைக்கு வெற்றி கரமாகத் திருமண வாழ்க்கையிலே அடியெடுத்து வைத்திருக்கிறார்கள். அதற்கு மீண்டும் நம் வாழ்த்துகள்.

### நம் குடும்பத் திருமண விழா!

நம் குடும்பத் திருமண விழாவில் கலந்து கொள்ளும்போது, எப்படி ஓர் உணர்வு ஏற்படுமோ, அதேபோலத்தான் இன்றைக்கு இந்தத் திருமண நிகழ்ச்சியிலே நாம் அத்தனை பேரும் கலந்துகொண்டிருக் கிறோம். அதற்குக் காரணம் என்னவென்றால், தம்பி ராஷிக் அவர்கள் இளைஞர் அணியிலிருந்து வந்தவர். அதுமட்டுமல்ல, அவருடைய குடும்பமே பாரம்பரியமிக்க திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக உழைத்த குடும்பம்.

தம்பி ராஷிக் அவர்களின் தாத்தா எம்.ஏ. அஜீஸ் அவர்கள் கழகம் தோன்றிய காலம் முதல் பூந்தமல்லிப் பகுதியில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய வளர்ச்சிக் காகப் போராடியவர், பாடுபட்டவர். பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களோடு நெருக்கமாகப் பழகியவர்.

### கழக அலுவலகம் திறந்தவர்!

பேரறிஞர் அண்ணா அவர்களை அழைத்துக்கொண்டு வந்து, இங்கே இருக்கக்கூடிய குமணன்சாவடியில் அவருக்குச் சொந்தமான இடத்தில், நம் கழக அலுவலகத்தைத் திறந்து வைத்த பெருமை அவருக்கு உண்டு.

ராஷிக்குடைய மாமா அப்துல் சத்தார் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞருடைய அன்புக்கு மிகுந்த பாத்திரமானவர். கலைஞர் அவர்கள் செல்லும் அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் கலைஞருக்குத் துணையாக இருந்தவர்தான் அவருடைய மாமா சத்தார் அவர்கள். நம் தலைவர் கலைஞர் அவர்கள் முதன் முதலாக சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்ட போது, கலைஞருக்காக வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரித்தவர்தான் ராஷிக்குடைய மாமா சத்தார் அவர்கள்.

தாத்தா மற்றும் மாமாவுடைய வழியில் இன்றைக்கு ராஷிக்கும் நம் கழகத்திற்காக 2010-ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து கழகப் பணியை ஆற்றி வருகிறார். 2016 முதல் நகர இளைஞர் அணித் துணை அமைப்பாளராகச் சிறப்பாகப் பணியாற்றி, 2024 முதல் நகர இளைஞர் அணி அமைப்பாளராக இன்றைக்கு மிகச் சிறப்பாக இளைஞர் அணிப் பணிகளை, கழகப் பணிகளைச் சிறப்பாக ஆற்றி வருகிறார்.

இப்படிப்பட்ட ஒரு பெருமை வாய்ந்த கழகக் குடும்பத்தில் நடைபெறுகின்ற இந்தத் திருமணத்திலே பங்கேற்று, மணமக்களை வாழ்த்துவது எனக்குக் கூடுதல் பெருமை.

### இஸ்லாமிய சொந்தங்களே சாட்சி!

இன்றைக்கு இந்தத் திருமண விழாவில் ஏராளமான இஸ்லாமியப் பெருமக்கள் கலந்து கொண்டிருக்கிறீர்கள், மணமக்களை வாழ்த்த வருகை தந்திருக்கிறீர்கள். இஸ்லாமிய மக்களுக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்துக்குமான உறவு, அதைப் பற்றி நான் உங்களுக்குச்சொல்லத்தேவையில்லை. தி.மு.க.வுக்கும் இஸ்லாமியர்களுக்குமான உறவு இன்று நேற்று உருவான உறவு கிடையாது. மறைந்த நம் கண்ணியமிக்க காயிதே மில்லத் அவர்கள் காலத்தில் உருவான உறவு இது. இஸ்லாமியர்களுக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்துக்குமானஉறவுநாளுக்குநாள்வலிமையாகிக் கொண்டே போகுமே தவிர, அதை ஒருநாளும் தி.மு.க.-வையும் இஸ்லாமியர்களையும் பிரித்துப் பார்க்க முடியாது. அதற்கு இங்கே உணர்வோடு திரண்டிருக்கக்கூடிய இஸ்லாமிய சொந்தங்கள் நீங்களே சாட்சி.

### மின்வெட்டும், அரிவாள் வெட்டும்!

இன்றைக்கு நம் தமிழ்நாடு என்ன நிலைமையில் இருக்கிறது என்று உங்கள் அத்தனை பேருக்கும் தெரியும். நம் தலைவர் ஆட்சியில் இருக்கும் பொழுது, நம் அரசு இருக்கும் பொழுது, திராவிட மாடல் ஆட்சியில் இருக்கும் பொழுது ஒரு நல்ல நிலையில் இருந்த தமிழ்நாடு, இன்றைக்கு ஒரு சர்க்கஸ் கும்பலிடம் மாட்டிக்கொண்டு முழித்துக் கொண்டிருக்கிறது இந்தத் தமிழ்நாடு.

சட்டம்-ஒழுங்கு எந்த நிலைமையில் இருக்கிறது என்று உங்களுக்கே தெரியும். நேற்று முன்தினம் மட்டும் தமிழ்நாட்டில் எட்டுப் படுகொலைகள் நடத்தப்பட்டிருக்கின்றன. நேற்று நம் தலைவர் முப்பெரும் விழாவில் பேசும்போது சொன்னார், இன்றைக்கு இருக்கக்கூடிய முதலமைச்சர் பாணியிலேயே சொல்ல வேண்டும் என்றால், `இன்றைக்கு இந்த ஆட்சியில் இரண்டே இரண்டு பேருக்குத்தான் போட்டி. ஒன்று மின்வெட்டு, இன்னொன்று அரிவாள் வெட்டு’ என்று நம் தலைவர் அவர்கள் சிறப்பாகச் சொன்னார்.

இன்றைக்கு மின்வெட்டு தமிழ்நாட்டில் உச்சத்தில் இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் முதலமைச்சருடைய சொந்தத் தொகுதியான பெரம்பூர் தொகுதியிலேயே மின்வெட்டு அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் தினமும் மக்கள் குடும்பம் குடும்பமாக வந்து சாலையில் மறியலில், போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டு இருக்கின்றார்கள். ஆட்சிக்கு வந்து நான்கு மாதங்கள் ஆகிவிட்டன. ஆனால், இதுவரைக்கும் பார்த்தீர்கள் என்றால், ஒரு திட்டத்தைக் கூட முழுமையாக நிறைவேற்றவில்லை. தேர்தல் அறிக்கையில் சொன்ன ஒரு வாக்குறுதியைக் கூட இன்னும் முழுமையாக நிறைவேற்றவில்லை.

ஒன்று நாம் தொடங்கிய திட்டத்தை ரத்து செய்திருக்கிறார்கள். அப்படி இல்லையென்றால், நாம் தொடங்கி வைத்த திட்டத்தின் பெயர்களை ஸ்டிக்கர் ஒட்டி மாற்றி இருக்கின்றார்கள். இதைப் பற்றி எல்லாம் சட்டமன்றத்தில் நாங்கள் எல்லாம் கேள்வி கேட்டால், அங்கு என்ன நிலைமை என்று நான் சொல்லத் தேவையில்லை. அத்தனை பேரும் இன்றைக்கு நேரலையில் பார்க்கிறீர்கள். நேரலைத் தொலைக்காட்சியில் பார்க்கிறீர்கள். சட்டமன்றத்தில் என்ன நடக்கிறது என்று இன்றைக்கு அத்தனை பேரும் பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள்.



### சட்டமன்றமா? ‘சூப்பர் சிங்கர்’ நிகழ்ச்சியா?

சட்டமன்றத்தில் முன்னெல்லாம் எதிர்க்கட்சியினர் கேள்வி கேட்பார்கள். ஆளுகின்ற அரசு, முதலமைச்சர், அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் பதில் சொல்வார்கள். ஆனால், இன்றைக்கு நாங்கள் கேள்வி கேட்டால், ஆளுங்கட்சியினர் அதற்குப் பதிலாகப் பாட்டுப் பாடுகிறார்கள். கேள்வி கேட்டால் பதில் சொல்ல முடியும், பாட்டுப் பாடினால், நாங்கள் என்ன எதிர் பாட்டா பாட முடியும்? எங்களுக்கெல்லாம் சில நேரங்களில் சந்தேகம் வந்துவிடுகிறது. என்ன நாம் சட்டமன்றத்துக்குத்தான் வந்திருக்கிறோமா? இல்லை `சூப்பர் சிங்கர்’ நிகழ்ச்சிக்கு வந்திருக்கிறோமா? `பாட்டு பாடவா’ நிகழ்ச்சிக்கு வந்திருக்கிறோமா? என்று அமைச்சர்கள் பாட்டுப் பாடுகிறார்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் பாட்டுப் பாடுகிறார்கள், சபாநாயகரும் பாட்டுப் பாடுகிறார். இன்னும் நடனம் மட்டும்தான் ஆட ஆரம்பிக்கவில்லை. சண்டைக்காட்சி, நடனம் இது மட்டும்தான் இன்னும் சட்டமன்றத்தில், அந்த சூட்டிங் மட்டும்தான் நடக்காமல் இருக்கிறது.

> **எங்களுக்கெல்லாம் சில நேரங்களில் சந்தேகம் வந்துவிடுகிறது. என்ன நாம் சட்டமன்றத்துக்குத்தான் வந்திருக்கிறோமா? இல்லை `சூப்பர் சிங்கர்’ நிகழ்ச்சிக்கு வந்திருக்கிறோமா? `பாட்டு பாடவா’ நிகழ்ச்சிக்கு வந்திருக்கிறோமா? என்று அமைச்சர்கள் பாட்டுப் பாடுகிறார்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் பாட்டுப் பாடுகிறார்கள், சபாநாயகரும் பாட்டுப் பாடுகிறார். இன்னும் நடனம் மட்டும்தான் ஆட ஆரம்பிக்கவில்லை. சண்டைக்காட்சி, நடனம் இது மட்டும்தான் இன்னும் சட்டமன்றத்தில், அந்த சூட்டிங் மட்டும்தான் நடக்காமல் இருக்கிறது.**

முதலமைச்சர் வாயைத் திறப்பதே கிடையாது. வாயைத் திறந்தார் என்றால், வெறும் பஞ்ச் வசனம்தான். அது எங்களைப் பார்த்துப் பேசுவது கிடையாது. அதுவும் கேமரா எங்கே இருக்கிறது என்று சரியாகப் பார்த்து, ஆங்கிள் எல்லாம் பார்த்து, சபாநாயகரிடம் அனுமதி வாங்கி, `டேக் போகலாமா’ என்று கேட்டுவிட்டு, சபாநாயகர் `ஆக்சன்’ என்று சொன்னதற்குப் பிறகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய பஞ்ச் டயலாக்கைப் பேசுகிறார்.

### முதலமைச்சரிடம் 16 கேள்விகள்!

கடந்த நான்கு மாதங்களாகச் சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை மிகவும் மோசமாக இருக்கிறது என்று நான் கேள்வி கேட்டேன். இவ்வளவு பிரச்சினைகள் நடந்திருக்கின்றன என்று சொன்னேன். கிட்டத்தட்ட 35 நிமிடங்கள் பேசினேன். முதலமைச்சரிடம் 16 கேள்விகள் கேட்டேன். இதற்கெல்லாம் முதலமைச்சர் அவர்களுக்கு மூன்று நாள் நேரம் இருக்கிறது, ஆயத்தமாகிவிட்டு வாருங்கள், அதிகாரிகளிடம் கேளுங்கள், என்ன பிரச்சினை என்று கேளுங்கள், இதற்கு என்ன தீர்வு காணப் போகிறீர்கள்? என்று தெளிவாகப் பதில் சொல்ல வேண்டும் என்று கேட்டேன்.

முதலமைச்சர் சட்டமன்றத்திலிருந்து ஓடிப் போய்விட்டார். சரி, நான்கூட ஆயத்தமாவதற்குத்தான் ஓடிப்போகிறார் போலிருக்கிறது, ஆயத்தமாகிவிட்டு மூன்று நாள்கள் கழித்து வந்து பதில் சொல்வார் என்று நின்றுகொண்டிருந்தால், காத்துக்கொண்டு இருந்தால், நாங்கள் கேட்ட ஒரு கேள்விக்குக் கூட முறையான பதில் கிடையாது.

### முறையான பதில் இல்லை!

என்ன செய்தார்? 50 ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த பிரச்சினையையெல்லாம் இழுத்துக்கொண்டு வந்து, சர்க்காரியா கமிஷன் பற்றித் தெரியுமா உங்களுக்கு? மிசா கைது பற்றி என்ன தெரியும் உங்களுக்கு? என்று இல்லாத பொல்லாத பொய்களையெல்லாம் அன்று சட்டசபையிலே பேசி இருக்கிறார்.

அதுமட்டுமல்ல, இன்னொரு பஞ்ச் டயலாக் பேசினார். அன்று நான் அவையிலேயே இல்லை. என்ன தெரியுமா சொன்னார்? ``என்னுடைய டேபிளில் மூன்று ஃபைல்கள் இருக்கின்றன. அந்த ஃபைலை என்னை திறக்க வைத்துவிடாதீர்கள்” என்று ஒரு பஞ்ச் வசனம் பேசினார். அடுத்த நாள் நான் போய்ச் சொன்னேன். ``ஒரு முதலமைச்சர் என்றால், ஒரு ஃபைல் வந்தது என்றால், உடனே அதைத் திறந்து அது என்னவென்று பார்த்து, கையெழுத்துப் போட்டு அதில் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏன் ஃபைலை உங்கள் டேபிள் மேலேயே வைத்திருக்கிறீர்கள்? ஏன் ஜோசியக்காரர் சொன்னால்தான் அதைத் திறந்து பார்ப்பீர்களா? தயவுசெய்து விரைவாகத் திறங்கள், யார் மீதாவது தவறு இருந்தால், உடனே நடவடிக்கை எடுங்கள்’’ என்று கேள்வி கேட்டேன். இதுவரைக்கும் அதற்கு ஒரு முறையான பதில் கிடையாது.

இப்படி சட்டமன்றத்தை ஓர் அலங்கோலக் காட்சியாக, இப்படி ஒரு கேடுகெட்ட ஒரு சட்டமன்றத்தை, இதுவரைக்கும் தமிழ்நாடு வரலாற்றிலேயே யாரும் பார்க்காத ஒரு சட்டமன்றத்தை, இன்றைக்கு நம் தமிழ்நாட்டு மக்கள் உருவாக்கி வைத்திருக்கிறார்கள்.

### பழியைப் போடும் வேலை!

எதைக் கேட்டாலும் முதலில் இங்கு இருக்கக்கூடிய ஆட்சியாளர்கள், முதலமைச்சர் உள்ளிட்ட ஆட்சியாளர்கள், அமைச்சர்கள் எல்லாம், அவர்கள் ஆட்சிக்கு வந்துவிட்டோம் என்பதையே இன்னும் நம்பவில்லை. எந்தக் கேள்வி கேட்டாலும், நம் மீது பழி போடுவது. ``தி.மு.க. ஆட்சியில் இது நடந்தது, தி.மு.க. ஆட்சியில் இது நடந்தது” என்று நம் மீது பழியைப் போடும் வேலையை மட்டும்தான் இங்கு இருக்கக்கூடிய முதலமைச்சரும் சரி, அமைச்சர்களும் சரி தொடர்ந்து செய்து கொண்டு இருக்கிறார்கள். எனவே, இப்போப்பட்ட கோமாளித்தனத்தைத்தான் இன்றைக்கு மக்கள் நேரலையில் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்.

அதுமட்டுமல்ல, ஆட்சிக்கு வருவதற்கு அறுதிப் பெரும்பான்மைக்குத் தேவை. 118 சட்டமன்ற உறுப்பினர்கள். ஆனால், இவர்களுக்குக் கிடைத்தது வெறும் 106. அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை, பெரும்பான்மை கிடையாது. இன்னும் சொல்லப் போனால், நம் தலைவர் தலைமையில், நம் திராவிட மாடல் அரசு தலைமையில், நம் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி தலைமையில் நம் ஆட்சியினுடைய சாதனைகளை எல்லாம் சொல்லி வாக்குக் கேட்டு, மக்களுடைய வாக்குகளைப் பெற்று இன்றைக்குச் சட்டமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் அல்லவா, நம் கூட்டணியின் ஆதரவோடுதான் இன்றைக்கு இந்த ஆட்சி நடந்துகொண்டு இருக்கிறது.

இன்னும் சொல்லப்போனால், நம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தயவில்தான் இன்றைக்கு இந்த ஆட்சி நடந்துகொண்டு இருக்கிறது.

அதனால்தான் இன்றைக்கு ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினராகப் பார்த்துப் பார்த்து, அதுவும் அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களை எல்லாம் விலைக்கு வாங்கும் வேலையில் இந்த அரசு இறங்கியிருக்கிறது.

### ‘ஏன்தான், இவர்களுக்கு வாக்களித்தோம்?’

இப்படி விலைக்கு வாங்கிய காரணத்தினால்தான் உங்களுக்குத் தெரியும், இரண்டு சட்டமன்ற இடைத்தேர்தல்கள் மதுராந்தகம், தாராபுரத்தில் இடைத்தேர்தல் நடக்க இருக்கிறது.

இந்த ரீல்ஸ் கும்பலுக்கு வாக்களித்த கொஞ்சநஞ்ச மக்களும், `ஏன்டா இவர்களுக்கு வாக்களித்தோம்’ என்று இப்போது கவலையில் ஆழ்ந்திருக்கிறார்கள். இந்த ஆட்சியாளர்கள் அடிக்கின்ற இந்தக் கூத்தையெல்லாம், செய்கின்ற இந்த அட்டூழியங்களை எல்லாம் மக்களுக்கு நாம் தொடர்ந்து அம்பலப்படுத்த வேண்டும். அதற்குச் சரியான ஒரு தண்டனையை வருகின்ற இடைத்தேர்தல் மூலமாக நாம் இந்த ஆட்சியாளர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி எந்த வரிசையில் இருந்தாலும் திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்குமே மக்களுக்காகக் களத்தில் நிற்கும் என்பதை இந்தத் தேர்தல் மூலமாக நாம் நிரூபித்துக் காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

### மணமக்களுக்கு ஒரு வேண்டுகோள்!

இந்த நேரத்தில் மணமக்களுக்கு ஒரு வேண்டுகோள். ஒருவரை ஒருவர் புரிந்து நடந்து கொள்ளுங்கள். காதல் திருமணம், அதனால் அதிகமாக அறிவுரை சொல்ல வேண்டிய அவசியம் கிடையாது. விட்டுக்கொடுக்கும் விஷயத்தில் விட்டுக்கொடுத்து, உரிமைகளை நிலைநாட்டும் இடத்தில் நிச்சயம் நிலைநாட்டுங்கள். உங்களுடைய வாழ்க்கையைப் பகுத்தறிவோடு, சுயமரியாதையோடு அமைத்துக்கொள்ளுங்கள் என்று கூறி, உங்கள் அத்தனை பேரின் சார்பாகவும் மணமக்களை வாழ்க வாழ்க என்று வாழ்த்தி, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மணமக்களை வாழ்த்திப் பேசினார்.